திருக்கோவிலூர் அருகே கூவனூர் மற்றும் சாங்கியம் கிராமம் இடையே

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.25.20 கோடியில் புதிய உயர்மட்ட பாலப் பணிகள்!

அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

திருக்கோவிலூர், ஜூலை 12-

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், கூவனூர் மற்றும் சாங்கியம் கிராமம் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலம் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (09.07 2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் உடனிருந்தார்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவனூர் மற்றும் சாங்கியம் கிராமம் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் மூலம் ரூ.25.20 கோடி திட்ட மதிப்பீட்டில் 19 கண்கள் கொண்ட 20 மீட்டர் நீளம் வீதம் 10 மீட்டர் அகலத்தில் 380 மீட்டர் நீளத்திற்கு உயர்மட்டப் பாலம் கட்டுமானப் பணிகளை 18.02.2024 அன்று பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

அப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இந்த பாலம் கட்டும் பணியானது தற்போது ரூ.9.75 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடிவுற்றுள்ளது. இதர கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பாலம் கட்டும் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பாலம் கட்டும் பணிகளின் தற்போதைய நிலை, கட்டுமானத்தின் தரம் உள்ளிட்டவை குறித்து நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார். கட்டுமானப் பணிகளை தரமாகவும், விரைந்த முடித்து உயர்மட்ட பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் தலைமை பொறியாளர் பா.செந்தில், கண்காணிப்புப் பொறியாளர் பரந்தாமன், கோட்டப் பொறியாளர் சேதுபதி, உதவிக் கோட்டப் பொறியாளர் மாரிமுத்து, உதவிப் பொறியாளர் பத்பநாபன் உள்ளிட்ட நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
12.07.2025 சனிக்கிழமை	காலை 9.00 மணி	கன்னியாகுமரி கிழக்கு	மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில்.
	மாலை 3.00 மணி	கன்னியாகுமரி மேற்கு	எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி.
19.07.2025 சனிக்கிழமை	மாலை 6.00 மணி	திருநெல்வேலி மத்திய	ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை.

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்-9-இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

நாள்	நேரம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
13.07.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	நாகர்கோவில்	மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில்.
	மாலை 4.00 மணி	பத்மநாபபுரம்	எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி.
19.07.2025 சனிக்கிழமை	காலை 9.00 மணி	ராதாபுரம்	எம்.எஸ்.மஹால், வள்ளியூர்.
20.07.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	பாளையங்கோட்டை	ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை.
	மாலை 4.00 மணி	திருநெல்வேலி	ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மக்கள் பெருமளவில் கூடும் பல பெரிய கோயில் விழாக்களை

எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு திருச்செந்தூர் குடமுழுக்கே வழிகாட்டி!

'தினத்தந்தி' தலையங்கத்தில் அறநிலையத்துறைக்குப் பாராட்டு!

சென்னை, ஜூலை 12-

அறநிலையத்துறை வரலாற்றில் திருச்செந்தூர் குடமுழுக்கு ஒரு மைல் கல் மக்கள் அதிகம் கூடும் பல கோயில்களின் விழாக்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு திருச்செந்தூர் குடமுழுக்கு வழிகாட்டியாக அமைந்ததுள்ளது என்று 'தினத்தந்தி' நாளேடு 11.7.2025 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

அறநிலையத்துறை வரலாற்றில் திருச்செந்தூர் கும்பாபிஷேகம் ஒரு மைல் கல் என்றால் அது மிகையாகாது.

அறுபடை வீடுகளில் 2ஆம் வீடான திருச்செந்தூர் முருகன் கோவிலில் 16 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 7ஆம் தேதி கும்பாபிஷேகம் கோலாகலமாக நடந்தது. இதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 4 ஆய்வு கூட்டங்கள் நடந்தது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவும், அறங்காவலர் குழுவும் ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே ஏற்பாடுகளை தொடங்கினர். இந்த கும்பாபிஷேகத்தோடு ரூ.400 கோடி மதிப்பிலான திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. கும்பாபிஷேகத்தில் பங்கேற்க லட்சக்கணக்கானோர் திருச்செந்தூரில் கூடியிருந்தனர். ஜப்பான் உள்பட வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள்

தலையங்கம்
தினத்தந்தி
11.7.2025 (வெள்ளிக்கிழமை)
அன்னை தமிழில் வேதங்கள் ஓத நடந்த கும்பாபிஷேகம்

வந்திருந்தனர். குறிப்பாக ஜப்பான் நாட்டில் இருந்துவந்த பக்தர்கள் பச்சை வேட்டி அணிந்திருந்தனர். ஆண்களும், பெண்களும் கந்தனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா என்று பக்தி பரவசத்துடன் விண்ணதிர கோஷமிட்டது மெய்சிலிர்க்க வைத்தது.

76 குண்டங்களுடன் வேள்விச் சாலை அமைக்கப்பட்டு 12 பெண் ஓதுவார்கள் உள்பட 108 ஓதுவார்களைக்கொண்டு அன்னைத் தமிழிலும், பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் மற்றும் கந்தர் அனுபூதி முற்றோதல் செய்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. கும்பாபிஷேகத்துக்காக நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பல உபயதாரர்கள் பல வேலைகளை தாங்களாகவே முன்னெடுத்து செய்தனர். கும்பாபிஷேகத் தன்று காலை மட்டும் ஒரே நேரத்தில் 5 லட்சம் பக்தர்கள் குழுமியிருந்தாலும் அனைவருக்கும் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மருத்துவ வசதி, பாதுகாப்பு என்று எந்த வசதிக்கும் ஒரு குறையும் ஏற்படவில்லை.

கோவில் சார்பில் ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டதோடு, ஒரு லட்சம் உணவு பொட்டலங்களும் மற்றும் தன்னார்வலர்களைக் கொண்டு 3 லட்சம் உணவு பொட்டலங்களும் மக்களுக்கு கொடுக்கப்பட்டன. கும்பாபிஷேகம் முடிந்தவுடன் பக்தர்கள் மீது 20 டிரோன்கள், நீர் தெளிப்பான்கள் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டன. ஒரு லட்சம் பிரசாத பைகளும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வளவு திரளான கூட்டம் இருந்தாலும் எங்கும் நெரிசலோ, எந்தவித குழப்பமோ இல்லாமல் கூட்ட மேலாண்மை சிறப்பாக கையாளப்பட்டது. கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம், ஐ.ஜி. பிரேம் ஆனந்த் சின்ஹா, நெல்லை போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹுடிமணி, தூத்துக்குடி போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான், திருச்செந்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு மகேஷ்குமார் உள்பட 9 மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் அடங்கிய 6,100 போலீசார் மிக திறமையாக இந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டனர். 27 ஆயிரம் மக்கள்தொகையை கொண்ட திருச்செந்தூரில் ஒரே நேரத்தில் 8 லட்சம் பேர் குவிந்தாலும் நெரிசலில் சிக்காமல் பக்தர்கள் கும்பாபிஷேகம் முடிந்தவுடன், தங்கள் ஊருக்கு எந்த வித சிரமமும் இன்றி திரும்பி செல்ல முடிந்தது. கூட்டம் அலை அலையாக வந்தாலும் வட மாநிலங்களைப்போல எந்த அசம்பாவிதமும் இல்லாமல் மிக திறமையாக கும்பாபிஷேகத்தை நடத்த முடிந்தது. இதற்கு அமைச்சர் சேகர்பாபு தலைமையிலான இந்து சமய அறநிலையத்துறையின் திட்டமிடுதலும், காவல் துறையின் அயராத பணியும்தான் காரணம். லட்சக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் கூடியிருந்தாலும் அசம்பாவிதம் இல்லாத கும்பாபிஷேகம் தான் இதன் பெருமை. எதிர்காலத்தில் மக்கள் அதிகம் கூடும் பல பெரிய கோவில்களின் விழாக்களை எப்படி நடத்தவேண்டும் என்பதற்கு திருச்செந்தூர் கும்பாபிஷேகம் வழிகாட்டியாக அமைந்து விட்டது. மொத்தத்தில் அறநிலையத் துறை வரலாற்றில் திருச்செந்தூர் கும்பாபிஷேகம் ஒரு மைல் கல் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

சாதி ஒழிப்பிற்கான முதல் படி "சமூக நீதி விடுதிகள்" என அழைப்பு!

ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது! இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஜூலை 12-

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர், கள்ளர், மற்றும் சிறுபான்மையினர் என்ற பெயரில் இயங்கும் 2739 அரசு விடுதிகள் இனி மேல் "சமூக நீதி விடுதிகள்" என்ற பொதுப்பெயரை சூட்டும் இந்த அறிவிப்பினை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்று பேரவைத் தலைவர் இரா. அதியமான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

பள்ளி மற்றும் கல்லூரிகளின் படித்து வரும் ஏழை எளிய, விளிம்பு நிலை, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்கி பயில்வதற்கான விடுதிகளை ஒரே பெயரில்

அழைக்கும் வகையில் "சமூக நீதி விடுதிகள்" என்ற அரசாணையை முதல்வர் பிறப்பித்திருக்கிறார்.

ஒருவர் எங்கிருந்து வருகிறார் என்பதை கணக்கில் கொண்டு உளவியல் ரீதியாக அவர் இந்த சாதி மதத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்ற அடையாளத்தை தரக்கூடிய இடமாக பி.சி. விடுதி, எம்.பி.சி. விடுதி, சீர்மரபினர் விடுதி, சிறுபான்மையினர் விடுதி, ஆதி திராவிடர் விடுதி, பழங்குடியினர் விடுதி மற்றும் கள்ளர் விடுதி ஆகியவை உணர்த்துகிறது.

இதை உடைக்க வேண்டும் என்ற பரிந்துரையை முன்னாள் நீதிபதி சந்துரு அரசுக்கு வழங்கியிருப்பதோடு நாமும் பொதுப்பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம்.

அதனடிப்படையில் சாதிய வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக ஒழிக்கும் பயணத்தில் முக்கிய படிநிலையாக கருதுமிடம் பள்ளி மற்றும் கல்லூரிகள்.

அதனால் தான் அந்த சாதி ஒழிப்பை அங்கிருந்து முன்னெடுப்பது தான் அவசியம் என்பதை மிகவும் கவனமாக கையாண்டிருக்கிறார் நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

சமூக நீதி - சம நீதி - சட்டநீதி அனைவருக்கும் பொது என்ற நிலையை உருவாக்கும் நம் திராவிட மாடல் அரசு தற்கால நம் இளம் சந்ததியினர் சாதி வேறுபாடுகளை தன் எண்ண ஓட்டத்தில் இருந்து துடைத்தெறிய வேண்டும் என்பதற்க்காகத் தான் அனைத்து விடுதிகளின் பெயரை மாற்றி "சமூக நீதி விடுதிகள்" என்ற பொதுப் பெயரை சூட்டியுள்ளதற்கு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது, பாராட்டுகிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வரும் செய்தி!

அறநிலையத்துறையின் கீழ் இயங்கும்
7 கல்லூரிகள்..
புதிய தலைமுறை

கல்லூரி பெயர்	தொடங்கப்பட்ட ஆண்டு	அன்றைய முதலமைச்சர்
அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, திண்டுக்கல்	1963	பக்தவச்சலம்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, திருநெல்வேலி	1964	பக்தவச்சலம்
பூம்புகார் கல்லூரி, நாகப்பட்டினம்	1964	பக்தவச்சலம்
ஸ்ரீ தேவி குமரி மகளிர் கல்லூரி, கன்னியாகுமரி	1965	பக்தவச்சலம்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்	1970	கருணாநிதி
அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில் நுட்பக்கல்லூரி, திண்டுக்கல்	1981	எம்.ஜி.ஆர் (இக்கல்லூரியில், நிரந்தரக் கட்டடம் ஒன்றை 2017-ல், அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்)
அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை	2021	மு.க.ஸ்டாலின்

"கோயில்களை கண்டாலே திமுகவுக்கு கண் உறுத்துகிறது. அந்தப் பணத்தை எடுத்து கல்லூரி கட்டுகிறார்கள். இது நியாயமா?" என ஜூலை 8 எடப்பாடி பழனிசாமி பேசியிருந்தார்

தகவல்: HRCE மற்றும் கல்லூரிகளின் அதிகாரப்பூர்வ தளங்கள்

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. துரித நடவடிக்கையால்

பீரகுப்பம் பழங்குடி மக்கள் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றம்!

'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்துக்குப் பாராட்டு!

திருவள்ளூர், ஜூலை 12-

முதல்வர், துணை முதல்வர் அறிவுறுத்தலின் பேரில் பழங்குடியின மக்கள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற அவர்கள் வாழும் பகுதியிலேயே இரவு முழுவதும் தங்கி குறைகளை கேட்டு 6 தெரு விளக்குகள், குடிநீர் குழாய் மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வுக்கு பழங்குடியின மக்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்குவார்கள்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிவதோடு அவர்கள் வாழும் பகுதிக்குச் சென்று நேரில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.சந்திரனிடம் திருத்தணி

ஒன்றியம் பீரகுப்பம் ஊராட்சி பழங்குடி மக்கள் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அதில் 16 குடிசைகளில் 48 பேர் குழந்தைகளுடன் வாழ்ந்து வருவதாகவும் அங்கு மின்சார வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் இருப்பதால் அதனை நிறைவேற்றி தர வேண்டும் என கோரிக்கை மனுவில் தெரிவித்து இருந்தனர்.

இதனால் பழங்குடி இன மக்களின் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை ஆகியவற்றை நேரில் சென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு அங்கு சென்றார்.

கூலி வேலைக்குச் சென்றவர்கள் தவிர 25 பேர் மட்டுமே இருந்த நிலையில் அங்கு கொசு போன்ற பூச்சிகள் வராமல் இருக்க, தீ மூட்டி பாடல்கள் பாடி பழங்குடியின மக்களோடு எம்.எல்.ஏ. தங்கினார். அதனைத் தொடர்ந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுடன் அமர்ந்து பாடபுத்தகங்களை எடுத்து படிக்க சொல்லி, தெரியாமல் இருந்த குழந்தை களுக்கு சொல்லிக் கொடுத்தும் மகிழ்ந்தார்.

அப்போது மின்சார வசதி இல்லாமல் எப்படி படிக்கிறீர்கள் என கேட்டபோது, பேட்டரியால் இயங்கும் விளக்குமூலம் படித்து வருவதால் சிரமத்திற்கு ஆளாவதாக குழந்தைகள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பழங்குடியின மக்களோடு மக்களாக தரையில் அமர்ந்து உணவு அருந்தினார்.

அங்குள்ள 16 குடிசை வீட்டு வாசலில் கயிறு கட்டில் ஒன்று போட்டுக் கொண்டு அங்கேயே இரவு முழுவதும் படுத்து தூங்கினார்.

பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அவர்கள் படும் துயரங்களை நேரில் பார்ப்பது மட்டும் இல்லாமல் அதனை தானும் அனுபவித்து நிறைவேற்றித் தருவதற்காக பழங்குடியின மக்களோடு மக்களாக இரவு முழுவதும் தங்கிய திருத்தணி எம்.எல்.ஏ. எஸ்.சந்திரனை பழங்குடி இன மக்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

மின்சாரம், குடிநீர், சாலை வசதி, குழந்தைகளின் கல்விக்கான வசதி போன்றவற்றை செய்து தருவதற்காக காலை 6 மணியளவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் வரவழைத்த திருத்தணி எம்.எல்.ஏ. சந்திரன் மின்வாரிய அதிகாரிகளிடம் மின் விளக்குகள் அமைத்து தரவும், குடிநீர் தேவைக்காக குழாய் அமைக்கவும், அவர்கள் தங்கி இருக்கும் பகுதிக்கு சாலை அமைக்கவும் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு ஆறு மின் விளக்குகள், குடிநீர் குழாய் ஆகியவற்றை உடனடியாக அமைத்தனர். மேலும் பழமொழி இன மக்கள் தங்கி இருக்கும் பகுதிக்கு சாலையிலிருந்து செல்ல ஏதுவாக சிமெண்ட் சாலையும் அமைக்கும் பணியையும் அவர் தொடங்கி வைத்தார்.

பழங்குடியின மக்களோடு மக்களாக இரவு முழுவதும் தங்கி காலையில் எழுந்தவுடன் கோரிக்கைகளை நிறைவேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருத்தணி எம்.எல்.ஏ. எஸ்.சந்திரனையும், ஆகியோரை பழங்குடி இன மக்கள் வெகுவாக பாராட்டினார்கள்.